06 வருட காலமாக வெற்றிகரமாக இயங்கி வரும் கல்வி நிறுவனம்

# தமிழ் மொழியும் இலக்கியமும்

ZOOM ONLINE CLASS

## தரம் 09

முதலாம் தவணை

**அலகு 04 – இதயம் அழுகிறது**



தமிழ் ஆசான்

**"அகரம் தினேஸ்"**

SLTS, BA (honours) IN TAMIL DIP IN G/D & ARTIFICIAL INTERLLIGENCE

REGISTER NOW 0778054232

AGARAM DHINES ONLINE ACADEMY

# 04. இதயம் அழுகிறது

## பகுதி I

1) **பின்வரும் சொற்கூட்டங்களுள் ஒரு சொல் ஒத்த கருத்தற்றது. அச்சொல்லின் கீழ்க் கோடிடுக.**

1. 1. தவறு 2. குற்றம் 3. பிழை 4. நெறி தவறுகை 5. வழுவுதல் 6. குறைவு
2. 1. பகடு 2. பெருமை 3. வலிமை 4. ஏர் 5. ஓடம் 6. பரிகாசம்
3. 1. காயம் 2. ஆகாயம் 3. உடல் 4. வடு 5. புண் 6. காயல்
4. 1. மகரந்தம் 2. பூந்தாது 3. கள் 4. வண்டு 5. சுறாமீன் 6. செடிவகை
5. 1. மதம் 2. கருத்து 3. கொள்கை 4. மதர் 5. சமயம் 6. வெறி
6. 1. உரம் 2. வலிமை 3. திண்மை 4. உரப்புதல் 5. மனத்திட்பம் 6. எரு
7. 1. மறை 2. இரகசியம் 3. வேதம் 4. மறைபொருள் 5. மறைசை 6. எதிர்மறை
8. 1. தாலம் 2. பனைமரம் 3. பூமி 4. விசிறி 5. நாக்கு 6. உண்கலம்
9. 1. மெய்: 2. உண்மை 3. பொய்மை 4. உடல் 5. மார்பு 6. ஆன்மா
10. 1. ஆறு 2. நதி 3. ஓடை 4. ஓர் எண் 5. தணிதல் 6. வழி

2) **பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுங்கள்.**

11. "சின்னதோர் குற்றம் தான் செய்தாய்" சின்னதோர் என்பதன் எதிர்ச்சொல்,

    1. சிறியதோர்
    2. பெரியதோர்
    3. அரியதோர்
    4. பென்னம் பெரிய



Agaram Dhines

12. “உன் போன்ற மாணவரை உயர்த்துவதில் நான் என்றும் கண்ணாய் இருந்து கரை சேர்ப்பேன்”- உயர்த்துவதில் என்பதன் எதிர்ச்சொல்,

1. பெருக்குவதில்
2. தாழ்த்துவதில்
3. தாக்குவதில்
4. மதிப்பதில்

13. “கடுங்கோபம் பொங்கியதால் தண்டித்துவிட்டேன்”- பொங்குதல் என்பதன் எதிர்ச்சொல்.

1. பெருகுதல்
2. தணிதலால்
3. குளிர்தலால்
4. தண்மை

14. “அழுகைக்குரல் கேட்டால் அருகில் வருகின்றாய்”. அழுகை என்பதன் எதிர்ச்சொல்.

1. கவலை
2. துன்பம்
3. சினத்தல்
4. நகைத்தல்

15. “என்னால் படிப்பிக்க இயலாது குமைகின்றேன்”. குமைகின்றேன் என்பதன் எதிர்ச்சொல்,

1. குழம்புதல்
2. சோர்தல்
3. புழுங்குதல்
4. தெளிதல்

**3) பின்வருவன சரியாயின் சரி என்றும் பிழையாயின் பிழை என்றும் எழுதுக.**

16. ஓர் எழுவாயின் முற்றுப்பெற்ற ஒரேயொரு கருத்தை உணர்த்துவது தனிவாக்கியம் எனப்படும். ( )
17. ஓர் எழுவாயின் ஒரு செயலை மாத்திரம் முற்றுப்பயனிலையாகக் கொண்டமைவது தொடர் வாக்கியமாகும். ( )
18. ஓர் எழுவாயின் பல செயல்களில் ஒரு செயல் மாத்திரம் முற்றுப் பயனிலையாக அமைய, ஏனையவை எச்சங்களாகத் தொடர்ந்து வருவதாக அமைகின்ற வாக்கியங்கள் தொடர் வாக்கியங்கள் எனப்படும். ( )
19. ஓர் எழுவாயின் பல செயல்களைக் கூறும் தனிவாக்கியங்களை ஒரு வாக்கியமாக அமைக்கும் போது வினைமுற்றுக்களை எச்சமாக்குதல் கூடாது. ( )
20. எண்ணுமைகளை, வேற்றுமை உருபுகளைச் சேர்த்தல். வினைமுற்றுக்களை எச்சமாக்குதல், அடைமொழியாக்கல் என்பன ஏற்புடையதாகும். ( )

**4) சரியான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.**

21. நாங்கள் என்னும் தன்மைப்பெயர் பிறர் கூற்றில் அமையும் வடிவம்,

1. எங்கள்
2. தாங்கள்
3. உங்கள்
4. நீங்கள்

22. நடக்கிறேன் என்பது பிறர் கூற்றில் அமையும் வடிவம்,

1. நடந்தான்
2. நடக்கிறான்
3. நடந்தேன்
4. நடப்பேன்

23. எழுதுக என்பது பிறர் கூற்றில் அமையும் வடிவம்,

1. எழுதும்படி
2. எழுதுங்கள்
3. எழுதவேண்டும்
4. எழுதுவார்கள்

24. பிறர் கூற்றில் நேற்று என்பது அமையும் வடிவம்,

1. இன்று
2. நாளை
3. முதனாள்
4. அடுத்தநாள்

Agaram Dhines

25. தங்கள் என்னும் பிறர் கூற்று வடிவம் தன்கூற்றாகும் போது மாறும் வடிவம்.
1. உங்கள்
3. எங்கள்
2. நீங்கள்
4. நாங்கள்

26. பூஞ்செடிக்கு நீர் ஊற்றி வளர்த்தான். இதில் வந்த நான்காம் வேற்றுமைப் பொருள்.
1.கோடல்
3. முறை
2. தகுதி
4. பகை

27. மாணவருக்குப் பணிவு சிறந்தகுணம். இதில் வந்த நான்காம் வேற்றுமை பொருள்.
1. கோடல்
3. முறை
2. தகுதி
4. பகை

28. ஐந்தாம் வேற்றுமைப் பொருளில் வராத வாக்கியம்,
1. தாயிற் சிறந்தவள்
3. நல்லூரின்கிழக்கு நாவற்குழி
2. கற்பிற் சிறந்தவள்
4. மரத்தில் கிளி இருந்தது

29. ஆறாம் வேற்றுமை சொல்லுருபு கொண்ட வாக்கியம்,
1. பேனா கொண்டு எழுதினான்.
2. கூலியின் பொருட்டு வேலை செய்தான்.
3. என்னுடைய வீடு இது.
4. கட்டிலின் கீழ் இருந்த பூனை.

30. ‘இல்’ உருபு ஏழாம் வேற்றுமைப் பொருளில் வந்த வாக்கியம்
1. மரத்திலிருந்து கிளி பறந்தது.
2. நல்லூரில் பெரிது கைதடி
3. மாதவி அழகில் சிறந்தவள்.
4. நாங்கள் வீட்டில் இல்லை.

**5) மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.**

31. பின்வருவனவற்றில் நிகழ்காலப் பெயரெச்சம் வந்த தொடர்
1. படித்த சிறுவன்
3. படிக்குஞ் சிறுவன்
2. படிக்கின்ற சிறுவன்
4. படித்து முடித்தான்

32. விளைந்த நெல்லை அறுத்துச் சூடு வைத்தனர். இதில் வந்த வினையெச்சம்.
1. விளைந்த
3. சூடு
2. வைத்தனர்
4. அறுத்து

33. பாம்பைக் கண்டு அஞ்சினான். இதில் கண்டு என்பது,
1. தெரிநிலைவினை முற்று
3. பெயரெச்சம்
2. குறிப்பு வினைமுற்று
4. வினையெச்சம்

34. குளம் வற்றியதும் அங்குள்ள நீர்ப்பறவைகள் வேறிடம் சென்றுவிடும். இதில் ஆகுபெயர்,
1. நீர்ப்பறவை
3. வேறிடம்
2. குளம்
4. ஆகுபெயர் இல்லை

35. ஆடிய மயில்கள் அழகாகக் காட்சியளித்தன. இதில் வந்துள்ள பெயரெச்சம்.
1. காட்சியளித்தன
3. மயில்கள்
2. ஆடிய
4. அழகாக

36. கருதுவதை எழுதுவேன். இதில் கருதுவது என்பது,

1. வினைமுற்று
2. பெயரெச்சம்
3. வினையெச்சம்
4. குறைவினை

37. இடைநிலை பெற்றும் பகுதி இரட்டித்தும் இறந்தகாலம் காட்டக்கூடிய வினையடி,

1. தொடு
2. பாடு
3. ஓடு
4. கொடு

38. நிகழ்காலமும் எதிர்காலமும் காட்டும் வினைமுற்று

1. நடப்பன
2. கொன்ற
3. குடிக்கும்
4. வாடியது

39. இருதிணை ஐம்பால் மூவிடத்திற்கும் பொதுவான தெரிநிலை வினைமுற்று,

1. வேறு
2. இல்லை
3. உண்டு
4. வெல்க

40. உயர்திணை, அஃறிணை இரண்டுக்கும் பொதுவாய் வரும் வினைமுற்று,

1. விழுந்தாய்
2. விழுந்து
3. விழுந்தார்
4. விழுந்தன

Agaram Dhines

## பகுதி II

**1) பின்வரும் பாடநூல் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

**1.** "எனக்குள்ளே எப்போதும் உன்னி கருக்கூட்டும் உணர்ச்சிகளைத் தெரிந்துள்ளாய்" என்பதன் வாயிலாக ஆசிரியர் எதனை வெளிப்படுத்த முயற்சிக்கிறார்?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**2.** "உன்போன்ற மாணவரை உயர்த்துவதில் நான் என்றும் கண்ணாயிருந்து கரை சேர்க்க முயற்சிப்பேன்" என்பதன் மூலம் ஆசிரியர் தமது இலட்சியத்தை எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**3.** ஆசிரியர் குறித்த மாணவனைத் தண்டிக்கக் காரணம் என்ன?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**4.** குறித்த மாணவன் வகுப்பில் அலட்சியமாக இருந்ததற்குக் காரணம் யாது?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**5.** ஆசிரியர் பாடத்தை மீண்டும் படிப்பிக்க இயலாமல் போனதற்குக் காரணம் என்ன?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**6.** 'இதயம் அழுகிறது' என்பதன் மூலம் ஆசிரியரின் மனோநிலை எடுத்துக் காட்டப்படுகிறது". இக்கூற்றினை நீர் ஏற்றுக் கொள்கிறீரா? விளக்குக.

…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

**7.** நல்லாசிரியர் - மாணவர் உறவை இப்பாடல் எவ்வாறு சித்திரிக்கிறது என்பதை விளக்குக.

…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

**2) பின்வரும் வாக்கியங்களில் வேற்றுமை உருபை அல்லது சொல்லுருபை ஏற்றுள்ள சொற்கள் உணர்த்தும் பொருள்களை அட்டவணையில் எழுதுக.**

| உருபு | சொல்லுருபு | இலக்கணப் பொருள் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

1. கடத்தல்காரர்களால் கண்ணன் தாக்கப்பட்டான்.
2. தாய் மகளுடன் சென்றாள்.
3. மரத்திலிருந்து பழம் விழுந்தது.
4. கம்பனது காவியம் ஒப்பற்ற இலக்கியமாகும்.
5. முதலமைச்சரது அலுவலகம் மக்களால் நிரம்பி வழிந்தது.
6. இராணுவத்தினரது நடமாட்டம் அதிகமாக காணப்பட்டது.
7. கரிகாலனது கைகள் கறைபடியாதவை.
8. ஆசிரியரிடத்தில் பணிவுடன் இரு.
9. காட்டின் கண் புலி வாழும்.
10. மரத்தில் குருவிக்கூடு இருக்கிறது.

**3) பின்வருவன சரியாயின் சரி என்றும் பிழையாயின் பிழை என்றும் எழுதுக.**

**1.** பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமையாகும். (        )
**2.** ஒரு தொழில் நிகழ்வதை அறிவிப்பது உடன்பாட்டு வினையாகும். (        )
**3.** எழுவாயை இடப்பொருளாக வேறுபடுத்தும் வேற்றுமையை ஆறாம் வேற்றுமை என்பர். (        )
**4.** இருபத்தெட்டு உருபுகள் ஏழாம் வேற்றுமைக்குரியது என நன்னூலார் கூறுவர்.

Agaram Dhines



Agaram Dhines (SLTS, BA Tamil, Dip in G/D) AI
0778054232

( )

5. எட்டாம் வேற்றுமைக்கு முதலாம் வேற்றுமைபோல் உருபு இல்லை. ( )

**4) பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான தொகைச் சொல்லை எழுதுக.**

1. குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ……………………………………
2. இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ……………………………………….
3. வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு ………………………………………………..
4. இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ………………………………………………
5. யானை, குதிரை, தேர், காலாள் ……………………………………………………..

**5) கீழே தரப்பட்டுள்ள பல சொற்கள் குறிக்கும் ஒரு பொருளின் பெயரை அட்டவணையில் எழுதுக.**

| பன்மொழி | ஒருமொழி |
|---|---|
| 1. சமர், யுத்தம், செரு, சண்டை, கலி | |
| 2. தலைவன், நாயகன், கொண்கன், பதி,கொழுநன் | |
| 3. அல்லல், துன்பம், இடுக்கண், சஞ்சலம், அலக்கண் | |
| 4. அறிவு, சந்திரன், மதித்தல், மாதம், அளவீடு | |
| 5. பொன், பக்கம், எருது, செல்வம், இடம் | |
| 6. புத்தி,விவேகம், அறிவு, போதம், ஆற்றல் | |
| 7. தென்றல், பவனம், மாருதம், வளி,கால் | |
| 8. கங்குல், இராத்திரி, நிசி, இரவு | |
| 9. ஆக்கல், படைத்தல்,உருவாக்குதல், சமைத்தல் | |
| 10. செருக்கு, ஆணவம், திமிர். கர்வம், அகங்காரம் | |

**6) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

அ) திரைப்படங்களால் வரும் நன்மை,தீமைகள்.
ஆ) நான் விரும்பும் விஞ்ஞானி - (தாமஸ் ஆல்வா எடிசன்)
இ) நீரின்றியமையாது.
ஈ) உண்மை உயர்வு தரும். (சிறுகதை)

**செயற்பாடு**

நீர் படித்துச் சுவைத்த நாட்டார் கதை ஒன்றினை எழுதி அதனை வகுப்பில் படித்துக் காட்டுக.

Agaram Dhines